III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

MCOP. 297/2020

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Tmt. R. Santhi Translator
in accordance with the provision of Act I for 1873 on 23-01-2023

| | | | |
|---|---|---|---|
| Name | :V.Alamelu | Caste | : |
| Husband's Name | :Vijayakumar | Calling | : |
| Age | : | Religion | : |
| Village | : | Taluk: | |

**முதல் விசாரணை/-**

நான் இம்மனுவின் மனுதாரர். நான் சொல்லக் கூடிய சங்கதிகளை சத்திய பிரமாணம் செய்து எழுத்து பூர்வமாக தாக்கல் செய்கிறேன். அதை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். மேலும் எனது தரப்பில் 16 ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன். அவற்றின் விவரங்கள் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவை, ம.தா.சா.1 முதல் 16 வரை ஆகும். எனவே நான் கேட்டுள்ளபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**இரண்டாம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்தததது எனது மகன். எனக்கு இன்னொரு மகன் உள்ளார். நான் 7வது வரை படித்துள்ளேன். தமிழ் ஓரளவுக்கு படிப்பேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. பிரமாணவாக்குமூலத்தின் முதல் பக்கத்தில் டி என் 20/டிஎ 2407 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தை மெதுவாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்த போது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும், டி என் 58/எ ஆர் 1262 என்ற பதிவு எண் கொண்ட முதலாம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான ஈச்சர் கண்டெயினர் லாரியின் ஓட்டுநர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. டிராக்டர் வாகனத்தின் ஓட்டுநரின் மீது கவனக்குறைவு உள்ளது என்று பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதால் அந்த வாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்பீட்டாளரை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்றால்

எனக்கு அது பற்றி தெரியாது. சுங்கச்சாவடி அருகே விபத்து நடைபெற்றது என்றால் அப்படித்தான் என்னிடம் சொன்னார்கள். ஈச்சர் கண்டெயினர் லாரி முன்னெச்சரிக்கை இல்லாமல் சுங்கச்சாவடி அருகே நின்றிருக்க வாய்ப்பு இல்லை என்றும் முறையான விதிகளின் படியும் அபாய எச்சரிக்கை பலகை வைக்கப்பட்டும் தான் அந்த வாகனம் நிறுத்தப்பட்டிருந்தது என்றால் சரியல்ல. வாட்டர் டாங்க் டிராக்டர் வாகன ஓட்டுநர் தனசேகர் தான் கவனக்குறைவுடன் ஈச்சர் கண்டெயினர் லாரியின் பின் பக்கத்தில் மோதிவிட்டார் என்றால் சரியல்ல. உரிய தரப்பினர்கள் சேர்க்கப்படாததினால் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இறந்த எனது மகனின் தொழில் மற்றும் வருமானத்தை காண்பிக்கும் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.